செய்தி வெளியீடு எண்: 386 நாள் –24.5.2008

**மக்கள் நல்வாழ்வுத் துறை திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அமைச்சர் – அதிகாரிகள் முன்னிலையில்**

**முதலமைச்சர் கலைஞர் ஆய்வு செய்தார்.**

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் துறைவாரியாக நடத்திவரும் ஆய்வுகளில் மூன்றாவது நாளான இன்று (24.5.2008) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நடைமுறைப்படுத்திடும் திட்டங்கள், அவற்றின் முன்னேற்ற நிலைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தலைமைச் செயலர், நிதித்துறை செயலர், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலர், வளர்ச்சித்துறை ஆணையர், பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர், எய்ட்ஸ் கட்டுப்பாடு திட்ட இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர், பொது சுகாதாரத் துறை இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, 2006இல் அரசு மருத்துவமனைகளில் காலியாக இருந்த 1862 மருத்துவர் பணியிடங்கள் உட்பட புதிதாக உருவாக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்களையும்சேர்த்து மொத்தம் 4665 மருத்துவர்கள், 13,247 மருத்துவம் சார்ந்த இதர பணியாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் நிரப்பப்பட வேண்டிய 565 மருத்துவர் பணியிடங்களையும், ஏறத்தாழ 2000 மருத்துவம் சார்ந்த இதர பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும்;

தமிழகத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வருமுன்காப்போம் திட்டத்தின்கீழ் மூன்றாண்டுகளில் 9000 மருத்துவ முகாம்கள் நடத்தப்படவேண்டும் என அரசு செய்த முடிவுக்கேற்ப இதுவரை நடத்தப்பட்டுள்ள 6431 மருத்துவ முகாம்களுடன், இலக்கினை நிறைவேற்றும் வகையில் எஞ்சிய மருத்துவ முகாம்களையும் தொடர்ந்து நடத்தி ஏழை எளியோர் பயன்பெற ஆவன செய்திட வேண்டுமென்றும்;

ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு அரசு சார்பில் 6000 ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்மூலம் 8 இலட்சத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கு 400 கோடி ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதற்குப் பாராட்டு தெரிவித்த முதலமைச்சர் கலைஞர் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தி குறைகளுக்கு இடமின்றிக் கர்ப்பிணிப் பெண்களுக்கு உடனுக்குடன் உதவித் தொகைகள் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென்றும்;

இதய நோய் பாதித்த, ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த இளஞ்சிறார்களுக்கு புகழ்வாய்ந்த தனியார் மருத்துவ மனைகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு சிகிச்சையைப் பொறுத்து ஒரு குழந்தைக்கு 70 ஆயிரம் ரூபாய் வரை நிதியுதவி வழங்கும் புதிய திட்டத்தில் இதுவரை 200 குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்துள்ளதுடன், சிகிச்சை தேவை என்ற நிலையிலுள்ள ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும் இதய அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள அதிகாரிகள் ஆவன செய்திட வேண்டும் என்றும்;

கடந்த இரண்டாண்டுகளில் 214 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மருத்துவமனைகளுக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 64 கூறுகள் சி.டி. ஸ்கேன்கள், லித்தோடிரிப்ஸி, கலர் டாப்லர் எக்கோ கார்டியோகிராபி, செமி ஆட்டோ அனலைசர், அல்ட்ரா சோனோகிராம், கோபால்ட் சிகிச்சைக் கருவிகள் உட்பட பல முக்கிய மருத்துவ சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளதால், அவற்றின் பயன்கள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்

அனைவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய வகையில் மருத்துவமனைகளின் நடைமுறைகளை மேம்படுத்திட வேண்டுமென்றும்;

ஏழை எளியோர்க்குப் பயன்படும் வகையில் அரசு மருத்துவமனைகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட 276 வகை மருந்துகளுடன், மேலும் 230 வகை மருந்துகளும் வழங்கப்படுவதால் இம்மருந்துகளைத் தட்டுப்பாடின்றிப் பொது மக்களுக்கு வழங்கிட கடந்த இரண்டாண்டுகளில் 335 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி அளித்து, நடப்பாண்டில் 221 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி அரசு மருத்துவமனைகளில் ஏழை எளியவர்களுக்குப் போதுமான அளவில் மருந்துகள் வழங்கப்படுவதை கண்காணித்திட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவுறுத்தினார்.

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், 1999ல் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்திய திட்டத்தின்படி, தமிழகத்தில் தற்போது 1000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்குகின்றன. இத்திட்டத்தின் பயனாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடைபெற்ற பிரசவங்களின் எண்ணிக்கை 2005–06ல் 81 ஆயிரத்து 411 என்பது, 2007–08ல் ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 213 ஆக உயர்ந்துள்ளதால் மீதமுள்ள 421 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனைகளாக மாற்றிட நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்;

385 வட்டார சுகாதார நிலையங்களிலும் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஏற்படுத்தும் இந்த அரசின் புதிய திட்டம் சிறப்பாகச் செயல்படும்வகையில் அதிகாரிகள் முனைந்து பணியாற்றிட வேண்டுமென்றும்;

தமிழ்நாட்டில்தான் எச்.ஐ.வி / எய்ட்ஸ் பாதித்தோரின் எண்ணிக்கை 1.13 விழுக்காடிலிருந்து 0.38 விழுக்காட்டிற்கு குறைக்கப்பட்டு, நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து, இதனை மேலும் குறைக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

2006–க்குப்பின் இந்த அரசு அறிவித்துள்ள விழுப்புரம், தருமபுரி, திருவாரூர், சிவகங்கை, பெரம்பலூர் ஆகிய 5 புதிய மருத்துவக் கல்லூரிகளையும் விரைந்து தொடங்கிட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கணினிகள் வழங்கப்பட்டு இணைய தளத்தின் மூலமாக ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் மற்றும் நோய்களின் தாக்கம் குறித்த அறிக்கைகள் தினமும் பெறப்பட்டு தொடர்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு
முதலமைச்சர் கலைஞர் பாராட்டு தெரிவித்தார்.

அண்மையில் திருவள்ளூர் மாவட்டத்தில் தட்டம்மை தடுப்பூசி போட்டவுடன் நான்கு குழந்தைகள் இறந்த நிகழ்வை மிகுந்த வருத்தத்துடன் நினைவுகூர்ந்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தற்போது அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில கிராமங்களிலும் மருத்துவர்கள் முன்னிலையில் தடுப்பூசிகள் போடப்படுவதைப் பொதுமக்கள் பெரிதும் வரவேற்பதால் தடுப்பூசிகள் போடும் திட்டத்தில் தொய்வு ஏதும் ஏற்படாதவாறு மருத்துவர்கள் முன்னிலையில் பாதுகாப்புடனும் விழிப்புடனும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இ.எம்.ஆர்.ஐ (EMRI) நிறுவனத்துடன் இணைந்து வரும் ஜூலை மாதம் முதல் செயல்படுத்தப்படவுள்ள அவசர கால ஊர்தி சேவைத் திட்டத்தினை மாநிலம் முழுவதிலும் தொடங்குவதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

அரசு மருத்துவமனைகளுக்கு அனுமதிக்கப்பட்ட புதிய கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் அனைத்தையும் உடனடியாக தொடங்கி, குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடித்து

**பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்;**

**புதுதில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்படும் சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பணிகளை விரைவுபடுத்திட வேண்டுமென்றும்;**

**இதேபோல மதுரை ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையையும் 120 கோடி ரூபாய் செலவில் புதுதில்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்திடத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்றும்;**

**மேலும் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதியோருக்காக 200 படுக்கைகள் கொண்ட முதியோர் நலம் பேணும் ஒரு மருத்துவமனையை மத்திய அரசின் உதவியுடன் உடனடியாகத் தொடங்கிட நடவடிக்கைகள் எடுத்திட வேண்டுமென்றும் முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகள் வழங்கினார்.**

**மருத்துவமனைகளைச் சிறந்த முறையில் நிர்வகித்திட மருத்துவர்களுக்கு நிர்வாகப் பயிற்சிகள் அளித்திட வேண்டுமென்றும், தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ் நடைபெறும் மருத்துவமனை நிர்வாகம் குறித்த ஆய்வினை விரைந்து முடித்து அறிக்கை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், பிரசவம் மற்றும் விபத்துகளால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவைப்படும் உடனடி சிகிச்சைகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்ட, வட்ட மருத்துவமனையிலும் 24 மணி நேரமும் அவசர அறுவை சிகிச்சைகள் செய்வதற்கான மருத்துவர் குழு ஒன்றை அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், தமிழகத்தின் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளுக்கும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் கலைஞர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

**இந்த ஆய்வின் முடிவில், "மருந்து இல்லாமலோ அல்லது மருத்துவர் இல்லாமலோ ஒரு குழந்தையோ அல்லது ஒரு மனித உயிரிழப்போ ஏற்படுமானால் அதனைப் பெரும் அவமானமாகக் கருதுவேன்; இதனை உணர்ந்து மருத்துவத் துறையில் பணிபுரியும் அனைவரும் சிறப்பாகச் செயல்படவேண்டும்" என்று முதலமைச்சர் கலைஞர் தெரிவித்தார்.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.